**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 39 /2020 DW1**

29.04.2025 **பி.வா.சா.1 பாலசுப்பிரமணியம் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

வாதியின் தகப்பனாருடன் ஒரு தவறான கிரைய உடன்படிக்கை செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கையில் சாட்சியாக இருந்தவர்கள், கிரைய பத்திரத்தில் சாட்சியாக இருந்தார்களா என்றால் இல்லை. கிரைய உடன்படிக்கையில் சாட்சியாக இருந்தவர்களுக்கு எவ்வளவு முன்பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை உண்மையாக இருந்திருக்கும் பட்சத்தில் உடன்படிக்கை சாட்சிகளையே மீண்டும் கிரையப் பத்திரத்திலும் சாட்சி கையொப்பம் போட அழைத்திருப்பேன் என்றும், கிரைய உடன்படிக்கை பொய் என்பதால் தான் அவ்வாறு அழைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்திற்கு 1ம் பிரதிவாதி மட்டூமே முழு உரிமையாளர் அல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்து கூட்டுக் குடும்ப சொத்து என்றும், அதனால் அதில் வாதிக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. நான் வாதிக்காக தொகை எதையும் டெப்பாசிட் செய்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கு வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் மைனர் பராமரிப்பு செலவு என பெயரளவிற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லும் கிரையப் பத்திரமே செல்லாது என்றால் சரியல்ல. சொத்துக்களைப் பொருத்து வாதிக்கு சமபங்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் தவறான அடிப்படையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக் கொண்டபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** - 4ம் பிரதிவாதி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.